# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
# அருப்புக்கோட்டை
## அசல் வழக்கு எண். 81/2022

வா.சா.1– குறுக்கு விசாரணை – நாள் 24–11–2025.

பெயர் = சங்கர்கணேஷ் வா.சா.–1

வா.சா.–1 நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் கு.வி. –

(1) நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். நான் ஜெயவிலாஸ் மில்லில் வேலை பார்க்கிறேன். சுமார் 15 வருடங்களாக வேலை பார்த்தேன். 2016–17 வருடம் வரை வேலை பார்த்தேன் தற்போது நெசவுத்தொழில் செய்து வருகிறேன். எனக்கு 2010ம் வருடம் திருமணமானது. 2016லிருந்து நான்கு வருடம் எண்ணெய் வியாபாரம் செய்து வந்தேன். என் மாமனார் மேற்படி வியாபாரம் செய்தார் நான் அவருடன் சேர்ந்து வேலை பார்த்தேன். திருமணம் முடிந்து நிரூபண அபிடவிட்டில் சொல்லிய முகவரியில் தான் குடியிருந்து வந்தேன். திருமணம் முடிந்து எனக்கும் என் தம்பிக்கும் தனித்தனியாக வீடு பிரித்துக்கொண்டோம். நான் திருணம் முடிந்த பிறகு என் மாமனார் வீட்டில் வசித்து வந்தேன் அதனால் என் தாய் தகப்பனை கவனிக்கவில்லை என்றால் சரியல்ல. என் பெற்றோரை உதாசினப்படுத்திவிட்டு மாமனார் வீட்டில் வசித்து வந்தேன் என்றால் சரியல்ல. என் மாமனார் பேச்சை கேட்டுக்கொண்டு 2022ம் வருடம் என் தாயாரிடம் தானசெட்டில்மெண்ட் எழுதிவாங்கினேன் என்றால் சரியல்ல. என் அம்மாதான் எழுதிக்கொடுத்தார் என சாட்சி கூறுகிறார்.

(2) தானசெட்டில்மெண்ட் எழுதி வாங்கிய பின் வீட்டிற்கு பின்புறம் நான் கூடுதலாக ஓடைபுறம்போக்கு இடத்தில் ரூ.5 லட்சம் செலவழித்து வீடு கட்டிக்கொண்டேன் என்றால் சரிதான். வீடுகட்டுவதற்கு என் அம்மா ஜெயினை அடகு வைத்துக்கொடுத்தார் என்றால் சரியல்ல. வீடுகட்டுவதற்காக ரொக்கமாக என் அம்மாவிடம் பணம் வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. என் அம்மாவிற்கு பராமரிப்பிற்காக ரூ.5 லட்சம் கொடுத்ததாக சொல்லியுள்ளது உண்மையல்ல என்றால் சரியல்ல. மேற்படி பணம் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பெற்றோரை நான் பராமரிக்காததால் என் அம்மா 10.08.2022ல் அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியரிடம் அவர் எழுதிக்கொடுத்த

தானசெட்டில்மெண்டை ரத்து செய்ய மனு கொடுத்தார் என்றால் சரிதான். இவ்வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் மனுவை கொடுத்ததாக சாட்சி கூறுகிறார். மேற்படி புகாரில் என்னையும், என் தம்பி ராஜேஷ்பாபுவையும் எதிர்மனுதாரராக காண்பித்திருந்தார் என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவின் விசாரணைக்கு 14.10.2022 ல் நானும், என் தம்பி, என் தாயார் எல்லோரும் ஆஜரானோம் என்றால் சரிதான். அந்த விசாரணையில் என் அம்மாவும், என் தம்பியும் வாக்குமூலம் கொடுத்தார்கள் நான் வாக்குமூலம் கொடுக்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

3) எனக்கு அது தெரியாது. பின்னர் நான் பதிவுதபாலில் அனுப்பிவைத்தேன் என சாட்சி கூறுகிறார். அந்த புகார் மனுவின் மீது 17.11.2022 ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அந்த உத்தரவில் நான் வாக்குமூலம் அளிக்க மறுத்துவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. அந்த உத்தரவின்படி என் தாயார் எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2023 ம் வருடம் ஜனவரி 5 ம் நாள் தேதிய வில்லங்கசான்றின்படி எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டது என்றால் எனக்குத் தெரியாது. நானும், என் தம்பியும் என் பெற்றோரை வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டதால் 6 மாதமாக வீடு இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டார்கள் என்றால் சரியல்ல. எங்களுடன் தான் இருந்தார்கள் என சாட்சி கூறுகிறார். 6 மாதமாக வெளியே இருந்தார்கள் என நான் என்னுடைய பிராதில் சொல்லியுள்ளேன் என்றால் அவர்களாகவே வெளியே செல்வதாக சொல்லி சென்றுவிட்டார்கள் என சாட்சி கூறுகிறார். நாங்கள் என் பெற்றோரை சரிவர கவனிக்காததால்தான் தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

4) என் மாமனார், மாமியாருடன் சேர்ந்து கொண்டு எண்ணெய் வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்காக என் தாயார் மூலம் ரூ.3 லட்சம் கடன் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி கடனை நான் கட்டாமல் விட்டுவிட்டதால் அவர் மிகவும் கஷ்டப்பட்டார் என்றால் சரியல்ல. என் மாமனாருடன் சேர்ந்து கொண்டு என் பெற்றோரை பராமரிக்காமலும், வாங்கிய கடனை கட்டாமலும் அவர்களை கஷ்டப்படுத்தியதால்தான் தானசெட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரியல்ல. தானப்பத்திரம் ரத்து செய்யப்பட்டது முறைப்படி செல்லும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S